பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 06 2024 **SUNDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு மற்றும் அமர்நாத் யாத்திரை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டார்.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் வரும் 30ஆம் தேதி ஒலிபரப்பாகவுள்ளது.

3. சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, உள்நாட்டிலும், இந்திய தூதரகங்களிலும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிக்கிமில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

5. முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற 266 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

>>>>><<<<<

பயங்கரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் சமீபத்தில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல்கள் குறித்து உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்ட அவர், நவீன யுக்திகளை பயன்படுத்தி தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

கஷ்மீர் பள்ளத்தாக்கு மற்றும் ஜம்முவில் தீவிரவாத நடவடிக்கைகளை முழு அளவில் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை ராணுவமும், பாதுகாப்புப்படையினரும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நடப்பாண்டுக்கான அமர்நாத் யாத்திரை இம்மாதம் 29ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் மாதம் 19ஆம் தேதிவரை நடைபெறுவதையொட்டி, அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளையும் திரு. அமித் ஷா இன்று ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், ஜம்மு காஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, உள்துறை செயலர் திரு. அஜய் பல்லா, முப்படைகளின் தலைமை தளபதி திரு. மனோஜ் பாண்டே மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் வரும் 30ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பின்னர் திரு. நரேந்திர மோடி ஆற்றும் முதலாவது மன்கிபாத் உரை இதுவாகும்.

இந்த நிகழ்ச்சியில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

1 8 0 0 1 1 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவும், **Namo** கைபேசி செயலி வாயிலாகவும் கருத்துக்களை வரும் 28ஆம் தேதிவரை தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதற்கு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளாக விவசாயிகள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கும் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறினார்.

>>>>><<<<<

சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் சிறப்பு யோகா பயிற்சி வகுப்புகளையும், நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றன.

இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் லண்டனில் நடைபெற்ற யோகா தின சிறப்பு நிகழ்ச்சியில் 700க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற சூரிய நமஸ்காரம் யோகாசனப் பயிற்சி நடைபெற்றது.

சேரா யோக்கத்தான் 2024 என்ற நிகழ்வில் 8 வயது முதல் முதியோர் வரை சூரிய நமஸ்காரம் செய்தனர்.

இதுகுறித்து இந்திய யோகா சங்க செயலாளர் திரு. இளங்கோவன் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த சூரிய நமஸ்காரம், உலகம் முழுவதிலும் பிரபலமடைந்துள்ளதாக தெரிவித்தார்.

உடல் ஆரோக்கியம் மற்றும் ஆன்மாவை தூய்மைப்படுத்தும் பணியை யோகாசனம் செய்கிறது என்றும் திரு. இளங்கோவன் கூறினார்.

>>>>><<<<<

நிதி மோசடிகளிலிருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில், மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கவரிகள் ஆணையம் நாடுமுழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடங்கியுள்ளது.

நாளேடுகள், செல்போன் குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள், சமூகவலைதளங்கள் மூலமாக மோசடி செய்பவர்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற தவறான தகவல்களை பெறுவோர், அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த விழிப்புணர்வு முகாம்கள் மூலமாக எடுத்துரைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிக்கிமில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மன்கன் மாவட்டத்தில் அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளை மாநில அமைச்சர் திரு. **Pintso Lepcha** பார்வையிட்டார்.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான உயரதிகாரிகளும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேவையான நிவாரண உதவிகளை மேற்கொண்டனர்.

வீடுகளை இழந்த மக்கள், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

15 வெளிநாட்டவர்கள் உட்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்ப்டுள்ளனர்.

வெள்ளம்சூழ்ந்த பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை விமானங்கள் மூலம் மீட்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மற்ற இடங்களில் சாலை மார்க்கமாக மீட்புப் பணிகள், அம்மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. **Thendup Butia** –வின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டது.

நிலச்சரிவால் சாலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் விமானங்கள் மூலம் மீட்புப் பணிகள் மேற்கொள்வதிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கும் பணியும் மாநில அரசின் சார்பில் நடைபெற்று வருகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தேசிய ஜனநாயக கூட்டணியை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கைகளிலும் ஐக்கிய ஜனதா தளம் ஈடுபடாது என்று அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. **K.C. Tyagi** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்த அவர், மக்களவை தலைவர் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தவறான அறிக்கைகளை வெளியிடுவதாக குற்றம் சாட்டினார்.

ஐக்கிய ஜனதா தளம் மற்றும் தெலுங்கு தேசம் கட்சியை பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் பிஜேபி ஈடுபடும் என்ற எதிர்கட்சிகளின் குற்றச்சாட்டினை திட்டவட்டமாக அவர் நிராகரித்தார்.

பிஜேபி இதுபோன்ற செயல்களில் எப்போது ஈடுபட்டதில்லை என்றும் திரு. **K.C. Tyagi** கூறினார்.

>>>>><<<<<

நீட் தேர்வு முறைக்கு ஆதரவான நிலைப்பாட்டை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஏழை எளிய மாணவர்களுக்கும், சமூக நீதிக்கும் எதிராக நீட் தேர்வு முறை அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

தகுதிக்கான அளவுகோளாக நீட் தேர்வு அமையவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்வுமுறை தொடர்பாக எழுந்துள்ள புகார்கள் பற்றி குறிப்பிட்ட திரு. மு.க.ஸ்டாலின், நீட்தேர்வில் அமைப்பு ரீதியாகவே மாற்றம் தேவைப்படுகிறது என்று கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திருப்பதி தொகுப்பு சுற்றுலா திட்டத்தின் மூலம், நாள்தோறும் 400 பேர் வரை பயணம் செய்யலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து காலை மணி 4.30க்கு சுற்றுலா பயணிகள் அழைத்துச் செல்லப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் **ttdconline.com** இணையதளத்தில் இதற்கான முன்பதிவு செய்யலாம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

சென்னை அகில இந்திய வானொலி, 86 ஆண்டுகளை பூர்த்தி செய்து, 87வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்துள்ளது.

இதனையொட்டி, அகில இந்திய வானொலியில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

சென்னை அகில இந்திய வானொலியில் தாம் பங்கேற்ற நிகழ்ச்சிகள் குறித்த நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார் திரைப்பட பின்னணிப் பாடகி மகதி.

>>>>><<<<<

பெங்களுருவில் நடைபெற்று வரும் முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற 266 ரன் என்ற இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 265 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் வரும் புதன்கிழமையும், மூன்றாவது மற்றும் இறுதிப்போட்டி வரும் 23ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 5 விக்கெட் வித்தியாசத்தில் ஸ்காட்லாந்தை வென்றது.

**>>>>>end<<<<<**